முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1592

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.02.2024**, புதன்கிழமை

1. பரபிரம்ம ஞான சொரூபமே
பரம ஆனந்த ஞான வடிவே
வரம் பல பெற்று இந்த கலியுகத்தில்
வள்ளலாக வாழுகின்ற அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரமாக இந்த கலியுகம் எங்கிலும்
வல்லமைபட தர்மத்தை வளர்க்கின்ற அரங்கனே
3. உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தொடர்ந்துரைப்பேன் ஞான அறிவுரை ஆசி உயர்வாக உமக்கு ஆற்றல் பெருக
(சோபகிருது வருடம் தை மாதம் 24 ம் நாள், 07.02.2024, புதன்கிழமை)
பெருகவே அனுதினம் அரங்கன் உனக்கு
பிசகின்றி சித்திகளும் அருளிவர
4. தருகின்ற உன் தர்மபலமே
தமிழகத்தையும் இந்த பரதம் முதல்
பேருலகத்தையும் ஞானலோகமாக மாற்றி
அற்புதம் நிகழ்த்தக் கூடும்
5. அன்னதனால் அரங்கனை நாடி உலகோர்
அனுகிவந்து தீட்சை ஏற்று
சிந்தை தெளிவு காணும்படி
சிறப்பறிவு கொள்ளும் உபதேசங்களை ஏற்று இனிதே
6. விந்தைபட உலகமாற்றம் நிகழ்த்தும் தர்மத்தை
விரைந்து உலகோர் கிளைகளாக நிறுவி
ஆங்காங்கே அன்னதான சேவை பெருக்கினால் போதும்
அதன்வழி ஆறுமுகன் யான்

7. ஆற்றலாக இறங்கி அரங்கன் ஞானமாக
அகிலத்தை மாற்றுகின்ற வேதமாக
ஆகவே ஆறுமுகன் அற்புதம் நிகழ்த்தி
அரங்கன் அவதார நோக்கத்தை உலகோர் அனைவரும் அறியும்படி செய்து
8. செய்துமே சுப்ரமணியர் யானும்
சிறப்பான ஞானலோகம் படைப்பேன்
மறுப்பின்றி அரங்கன் வழி வரவே
மண்ணுலகுக்கு இந்த மாற்றம் நிகழும் நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—